பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்
நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3-50

PUMP
With
Standard Accessories
Select
NEWTONE
Water Pumps

சுடர் 5: பிரமோதூத ஆனி மீ உ 30 சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 20 (14 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAM L DAILY கதிர் 141

★ ஈழத் தமிழர் படுகொலை
★ தமிழகத்தில் அகதிகள் குவிதல்

# இலங்கையுடன் பேச இந்திய அரசு முடிவு

## புதுடில்லியில் நேற்று அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 14

ஈழத்தமிழர் படுகொலை செய்யப்படுதல், தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் குவிதல் ஆகிய விடயங்கள் குறித்து இலங்கை அரசுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவது என்று இந்திய அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் இந்த அறிவிப்பை நேற்று புதுடில்லியில் வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப் படைகளுக்கும் இடையிலான சண்டையில் பெருமளவில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது இந்தியாவுக்கு மிகுந்த கவலையைத் தருவதாக அந்த அதிகாரி சொன்னார்.

இலங்கை நெருக்கடியினால் ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்திற்கு படையெடுக்கத் தொடங்கியிருப்பதும் இந்தியாவுக்குப் பெரும் சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது. என்றார் அவர். (உ-எ)

மக்கள் நெருக்கமாக வாழும்

# யாழ். சின்னக்கடைப் பகுதியில் பொம்மர்கள் நேற்று குண்டுவீச்சு!

## மூவர்காயம்; இருபதுக்கும் அதிகமான வீடுகள்சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். நகரில் மக்கள் நெருக்கமாக வாழும் சின்னக்கடைப் பகுதியில் நேற்றுமாலை 4.30 மணியளவில் இரண்டு போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் சுமார் பத்து வீடுகள் தரைமட்டமாகின இருபதிற்கும் அதிகமான வீடுகள் சேதமுற்றன.

ஒரு சிறுமி உட்பட மூவர் படுகாயமுற்றனர்.

இரு அவ்ரோ விமானங்கள் நேற்று மாலை நகரைச்சுற்றி வட்டமிட்டன. அவற்றில் ஒரு விமானம் யாழ். கோட்டைக்குள் உணவுப் பொதிகளைப் போட முயற்சிக்க மற்றைய விமானம் மக்கள் வாழும் பகுதிகள் மீது பீப்பாய்க் குண்டுகளை வீசியது.

இந்த விமானம் வீசிய பீப்பாய்க் குண்டுகளில் ஒன்று சின்னக்கடைப் பகுதியில் டேவிட் வீதி - ராஜேந்திரா வீதிப் பகுதியில் விழுந்து பெரும் அதிர்வுடனும், தீச் சுவாலையுடனும் வெடித்தது. அவ்விடத்தில் ஐந்து வீடுகள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக் கழக அனுமதி; விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஜூலை 14

1990 – 1991 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி கோரி விண்ணப்பிப்பதற்கான காலஎல்லை காலவரையின்றி நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

அனுமதி கோரி விண்ணப்பிக்கத் தேவையான விண்ணப்பப் பத்திரங்களைப் பெறாதோர் கூடிய விரைவில் அவற்றைப் பெற்று விண்ணப்பிக்கும்படியும் தகுதிபெற்ற மாணவரை ஆணைக்குழு கோரியுள்ளது.

விண்ணப்பம் தாமதமாக அனுப்பப்படுவதற்கான காரணத்தையும் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதற்கான சத்தியக் கடதாசியும் சமர்பிக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 14 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-எ)

### சுபநேரம்

14 - 7 - 90

சனிக்கிழமை ஆனி 30

சுபநேரம்:
03-00— 04-30

இராகுகாலம்
09-00—10-30

## இராணுவ நடவடிக்கைக்கு வடக்கே கொப்பேகடுவ!

கொழும்பு, ஜூலை 14

வடக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளுக்குப்பொறுப்பாக மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வடக்கில் தீவிரவாதிகளின் பலத்தை ஒடுக்கி, சட்டம் ஒழுங்கை வடமாகாணத்தில் நிலை நிறுத்தும் வகையில் அவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவே செயற்பட்டார் என்பது தெரிந்ததே.

கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா கடந்த வியாழன் நியமிக்கப்பட்டார்.

1987 ஆம் ஆண்டில் வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ''லிபரேசன் ஒப்பரேசனுக்கு'' இவரே பொறுப்பாகவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

## இராணுவத் தீர்வே வழி என்கிறார் சிறிமாவோ

வடக்கு-கிழக்கில் நடைபெற்று வரும் மோதலை இராணுவத் தீர்வு ஒன்றே முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

பேச்சுக்கள் மூலம் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு முயன்று கொண்டு இருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் யுத்தத்திற்குச் செல்லத் தீர்மானித்தனர்.

இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் முதல் முயற்சி எடுக்க வேண்டும்- இவ்வாறு திருமதி பண்டாரநாயக்கா பேட்டியில் மேலும் தெரிவித்தார். [உ-எ]

### திருமலையில் நடந்தது என்ன?

நேரில் அனுபவித்த அரச அதிகாரி ஒருவர் கூறும் தகவல்

3 ஆம் பக்கத்தில்

## முகாமில் கோஷ்டி மோதல்

திருச்சி, கொட்டபத்து அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் ஈ.பி.ஆர்.எல் எப் இயக்கத்தைச் சேர்ந்த இரு கோஷ்டிகளிடையே வியாழன் இரவு ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (இ-எ)

# கொக்காவில் முகாமில் உயிரிழந்த 65 சிப்பாய்களின் சடலங்கள் மீட்பு

## இடிபாடுகளிடையே மேலும் பல சடலங்கள்?

யாழ்ப்பாணம், ஜூலை 14

கொக்காவில் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த சிப்பாய்களில் 65 பேரின் சடலங்கள், நேற்று மாலைவரை விடுதலைப் புலிகளினால் முகாம் இடிபாடுகள் இடையே இருந்து மீட்கப்பட்டன.

மேலும் பல சடலங்கள் இடிபாடுகளுக்கிடையில் இருக்கக் கூடும் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த இராணுவத்தினரில் இரண்டு கப்டன்களும் நான்கு லெப்டினட்டுகளும் அடங்குவர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதல் நடைபெற்ற வேளையில் கொக்காவில் முகாமில் 60 முதல் 70 வரையான இராணுவச் சிப்பாய்கள் இருந்தனர் என்றும் அவர் சொன்னார்,

தாக்குதலின்போது உயிர் தப்பிய மூன்று சிப்பாய்கள் காட்டு வழியாகச் சென்று வியாழன் காலை வவுனியா போய்ச் சேர்ந்தனர் என்றும் அவர் கூறினார்.

தாக்குதல் சம்பவத்தை அடுத்து வவுனியாவில் இருந்து மேலதிக இராணுவத்தை கொக்காவிலுக்கு அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் அப் பிரதேசத்தைச் சுற்றி கண்ணி வெடிகளை புதைத்து வைத்திருந்ததனால் அது சாத்தியப்படவில்லை - என்றும் மேலும் அவர் சொன்னார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளி நோக்கிச் சென்ற படையினர் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

நேற்று திருகோணமலை 10ஆம் கட்டை, வெல்கம் விகாரை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து நிலாவெளி காட்டுப்பகுதி நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; கண்ணி வெடியில் சிக்கி ஆறு இராணுவத்தினர் காயமுற்றனர்.

— இவ்வாறு விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலை அடுத்து இராணுவ அணி முகாமுக்கு பின்வாங்கிச் சென்றது என்றும்—

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கேதீஸ், அரசன் ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## அ. தி. மு. க. மீண்டும் இரண்டாகப் பிளவுபட்டது

சென்னை, ஜூலை 14

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிளவு பட்டுவிட்டது.

அ. தி. மு. கவில் இருந்து பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவால் கடந்த வியாழக்கிழமை வெளியேற்றப்பட்ட பதினாறு பிரமுகர்களும் தனிக்குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

திரு. திருநாவுக்கரசு செய்தியாளர்கள் மத்தியில் நேற்றுத் தெரிவித்ததாவது:-

''செல்வி ஜெயலலிதா அடிப்படை உறுப்பினர்களால் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர். ஆகவே எம்மை வெளியேற்றிய உத்தரவு செல்லாது'' என்றார். (ஒ-எ)

# கிளிநொச்சியில் வியாழன் இரவு விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

கரடிப்போக்குச்சந்தி, கணேசபுரம், 55 ஆம் கட்டை, பரந்தன் பகுதிகளை இலக்கு வைத்தே குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குண்டு வீச்சினால் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகள் அதிர்ந்தன. மக்கள் பதற்றம் அடைந்தனர்.

தாக்குதலுக்கு முன்னர் — வியாழன் மாலை 6 மணியளவில் — இருந்து 7 மணிவரை வேவு விமானம் ஒன்று கிளிநொச்சிப் பகுதியைச் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

குண்டு வீச்சுக்கு இலக்காகி கரடிப் போக்குச் சந்தியில் லோட்டஸ் ஸ்ரோர்ஸ், பண்டி சைக்கிள்கடை, கணேசபுரத்தில் எஸ். மயில்வாகனம், பொ. மாகலிங்கம் ஆகியோரது வீடுகளும் 55 ஆம் கட்டையடியில் குமரன் ஸ்ரோர்ஸும் சேதமுற்றன.(ஒ-76)

### பலாலி ஷெல்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

பலாலிப் பக்கத்திலிருந்து ஏவப்பட்ட பல ஷெல் குண்டுகள், நேற்றிரவு யாழ். நகரப் பகுதியில் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தன. (உ)

## ஆனையிறவு ஊடான போக்குவரத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆனையிறவு ஊடான போக்குவரத்துக்கள் நேற்று முன்தினம் முதல் நிறுத்தப் பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்தும் —

இராணுவத்தினர் பொது மக்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு முகாமிலிருந்து வெளியேற முற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டதை அடுத்துமே ஆனையிறவு ஊடான சேவைகள் நிறுத்தப்பட்டன. (உ-10)

### கல்மடுவிலும் குண்டு வீச்சு

கிளிநொச்சி, ஜூலை 14

கடந்த புதன் இரவு கல்மடு காட்டுப் பகுதியில் பலத்த பொம்மர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பல கால்நடைகள் கொல்லப் பட்டன. [இ-76]

## கோட்டையில் 1 சிப்பாயும் மன்னாரில் 3 பேரும் பலி!

யாழ். கோட்டைப் பகுதியில் நடந்த சண்டையில் இராணுவ சிப்பாய் ஒருவர் இறந்ததாகவும்-

மன்னாரில் நடந்த மோதலில் மூன்று சிப்பாய்கள் இறந்ததாகவும்-

நேற்று கொழும்பில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### முச்சந்தி முரளி



யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்டுவிட்டு ஏதோ பெரிசா அனுப்பின மாதிரி வெளிஉலகத்துக்குப் பறை அடிப்பினம் பாருங்கோ......!

ஒரு மாதத்தின் பின்னர்

# நேற்று வந்த உணவும் மருந்தும் ஒரு நாளைக்கு மட்டுமே போதும்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம் பகுதியில் கடந்தமாதம் பதினாறாம் திகதி யுத்தம் தொடங்கிய பின்னர், நேற்று முதற் தடவையாக பன்னிரண்டுலொறிகளில் உணவுப் பொருள்களும், மருந்துப் பொருள்களும் கொழும்பில் இருந்து வந்துசேர்ந்தன.

நேற்று வந்துசேர்ந்த உணவுப் பொருள்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒரு நாளைக்கு மட்டுமே போதுமானதாகும்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட லொறிகள் மதவாச்சிக்குச் சென்றுகொழும்பிலிருந்து வந்த உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டு மடு வழியாக நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

யாழ். மாவட்டத்துக்கு ஒரு மாதத்துக்காவது தேவையான 6,000 தொன் அரிசி 4,000 தொன் மா, 3,000 தொன் சீனி, ஆயிரம் தொன் பருப்பு, பால்மா உட்பட வகைகளை உடனே அனுப்பும்படி அரசு

(2 ஆம் பக்கம் பா[ர்க்க])

## யாழ் கோட்டைப் பகுதியில் நேற்றிரவு மோதல்

யாழ் கோட்டைப் பகுதியில் நேற்று இரவு 8 மணி முதல் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல் தாக்குதல்களும் விட்டு விட்டு இடம்பெற்றன.

ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றிசெய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளித[ழ்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

பனம்பாணி தேவை. கைவி ருப்பில் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். (சி-5261)

### இறைச்சிக்கோழி விற்பனை

எல்லா வகையான இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (13730)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கு உகந்த சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா & 'பிரதர்ஸ்' பிரம்படி லேன், கொக்குவில். (13596)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளிலும், மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கும் கற்பிக்கப்படும். தொடர்பு:- சனி, ஞாயிறு தினங்கள் அல்லது கடிதமூலம் S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக்கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3912)

### ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சை

17-06-90இல் இடை நிறுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும் முன்னோடிப் பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்களும் 15-07-90 காலை 9.30 இற்கு சமூகம் தரவும் விபரங்கட்கு செல்வி எஸ். எஸ். ஐயர் 12 (36) வைமன் வீதி, நல்லூர். (13737)

### V.K.M. FARM CENTRE

இறைச்சிக்கோழி புறொயிலர் சில்லறைவிலை ரூபா 50/- சுத்தமாக தயார்செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி (Layer mash) விற்பனைக்குண்டு தொடர்பு:- 12, கஸ்தூரியார் லேன், (யாழ் இந்துக் கல்லூரி பின்பக்கம்) K. K. S. Road, யாழ்ப்பாணம் (13658)

### தவறிவிட்டது

10-7-90 அன்று கொழும்பில் இருந்து யாழ் வந்த பிள்ளையார் பஸ்ஸில் பிரயாணம் செய்த, எனது நீல நிறமுள்ள பிரயாணப் பை 11-7-90 அன்று நல்லூர் கோவிலடியில் இறங்கும் போது காணாமல் போய்விட்டது எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன் அதனுள் மருந்துகள் கடிதங்கள் அடங்கியுள்ளன (13736)

### இடமாற்றம்

ஓமேகா சேர்வேஸ் ஒழுங்கிற்கு சந்தி[...] டுள்ளது, தற்பொழுது கொக்குவில் [குளப்பிட்டி இடமாற்றப்பட்

**Omega Elect, & Ref. Engineers**

[13729]

## சாரதி - கிளீனர் தாக்கப்பட்டனர்

கோப்பாய், ஜூலை 14 கொழும்பிலிருந்து சுமார் 75பேரை ஏற்றி வந்த நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த லொறிச் சாரதியும், கிளீனரும் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-72)

# அவசர நோயாளரை மட்டும் மானிப்பாய் வரக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 19 மானிப்பாய் மெமோறியல் யாழ் வைத்தியசாலைப் பிரிவில் நோயாளிகளுக்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே அவசர நோயாளர்களைத் தவிர ஏனையோர் தமது கிராமங்களுக்கு சமீபமாக உள்ள வைத்திய சாலைகளுக்கு செல்ல வேண்டும்.

யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி புஸ்பா சண்முகம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண்களும் தமது வீடுகளுக்கு சமீபமாக உள்ள பிரசவ விடுதிகள் அல்லது வைத்திய சாலைகளுக்குச் செல்லலாம் என்றும் அவர் ஆலோசனை கூறி உள்ளார்.

### சோவியத்

## கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு

மாஸ்கோ, ஜூலை 14 சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ரஷ்ய சம்மேளன குடியரசு ஜனாதிபதியாக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட திரு. போரிஸ் யெல்ட்சின் தனைமையில் ஜனநாயக வாதிகள் கட்சியில் இருந்து ராஜினாமா செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது

தனது ராஜினாமாவை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 28 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் திரு. யெல்ட்சின் அறிவித்தார்.

அதன் பின்னர் அவர் மாநாட்டு மண்டபத்தை விட்டு வெளியேறி, தனது காரில் ஏறிச் சென்று விட்டார்.

பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில் புதிய சுதந்திரமான கட்சி ஒன்றை சில மாதங்களில் தான் அமைக்கப் போவதாகக் கூறினார்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களில 40 சதவீதமானோரின் ஆதரவு தனக்கு உண்டு என்றும் அவர் சொன்னார்.

திரு. யெல்ட்சின் ஜனாதிபதி கோர்பச்சேவின் பிரதான அரசியல் எதிர்ப்பாளராக இருந்து வருகிறார். (இ-எ)

### ஹரியானாவில்

## சௌதாலா நியமனத்துக்கு ராஜ்மோகன் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 14 துணைப் பிரதமர் தேவிலாவின் புதல்வரான திரு. ஓம் பிரகாஷ் சௌதாலா ஹரியானா மாநில முதலமைச்சராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டதை, ஜனதாதள் தலைவர்களில், ஒருவரான ராஜ்மோகன் காந்தி கண்டித்திருக்கிறார்.

மகாத்மாகாந்தியின் பேரரான திரு ராஜ்மோகன் காந்தி, மேஹம் தொகுதி வன்செயல்கள் பற்றிய விசாரணை முடிவடைவதற்கு முன்னர் சௌதாலா முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டது தார்மீக தவறாகும் என்று கூறினார்.

பாரதிய ஜனதாக் கட்சியும் இத் தெரிவைக் கண்டித்துள்ளது.

விசாரணை முடியும் வரை திரு. சௌதாலா முதலமைச்சராக நியமிக்கப்படமாட்டார் என்று பிரதமர் வி பி சிங் அளித்த உறுதி மொழி எங்கே என்று இந்திரா காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது.

மேஹம் தொகுதி இடைத் தேர்தலில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து முதலமைச்சர் பதவியை திரு. சௌதாலா ராஜினாமா செய்திருந்தார்.

அவ் வன்செயல்களில் திரு. சௌதாலாவுக்குள்ள தொடர்பு பற்றி நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது அறிக்கையை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை. [இ-எ]

### வடக்கு- கிழக்கு

## முஸ்லிம்கள் நிலை பயங்கரம் என்கிறார் சபாநாயகர்

கொழும்பு' ஜூலை 14 வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அகதிகளாக உள்ள முஸ்லிம் மக்களின் நிலை பயங்கரமானதாக இருப்பதாக சபாநாயகர் எம். எச். முஹம்மத் கூறியிருக்கிறார்.

கடந்த வியாழன் முஸ்லிம் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் சபாநாயகர் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

முஸ்லிம்களும் வீடுகளை இழந்துள்ளனர் அவர்களுக்கு உணவில்லை; மருந்து இல்லை குடிக்க தண்ணீர் இல்லாத நிலையும் சில இடங்களில் நிலவுகிறது.

எனவே அவர்களுக்கு அவசரமாக உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை அனுப்பி உதவ நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

இப்படி சபாநாயகர் கேட்டுக் கொண்டார். (இ-எ)

### புரட்சி தினம்

இன்று 14 ஆம் திகதி பிரெஞ்சுப் புரட்சியின் 201 ஆம் ஆண்டு நிறைவு பிரெஞ்சு தேசிய தினமாக கொண்டாடப்படுகிறது

## முகாம்களிலுள்ள அகதிகள்

தற்சமயம் முகாம்களில் தங்கியுள்ள வடக்கு - கிழக்கு அகதிகள் பற்றிய புள்ளி விவரம் ஒன்றை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஏ எம். எஸ். அதிகாரி வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம்- 12 முகாம்கள்: 80 ஆயிரம் பேர்

வவுனியா மாவட்டம்:- 32 முகாம்கள்: 53, 600 பேர்

அனுராதபுரம் மாவட்டம்- 24 முகாம்கள்: 10 655 பேர்

திருகோணமலை மாவட்டம்:- 10 முகாம்கள்: 8 ஆயிரம் பேர்

அம்பாறை மாவட்டம்:- 23 முகாம்கள்: 40,012 பேர்

பொலநறுவை மாவட்டம்:- 2 முகாம்கள்: 400 பேர்

மொனறாகல மாவட்டம்-: 2 முகாம்கள்: 532 பேர்

வடமாகாணத்தில் உள்ள அகதிகள் பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை. (இ-எ)


### இடமாற்றம்

17/1, சின்னக்கடை வீதியில் உள்ள

**சிவலிங்கம் வைத்தியசாலை**

56, டேவிட் றோட்டுக்கு

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (13725)



### முக்கிய அறிவித்தல்

வெளி மாவட்டத்தில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு உதவும் முகமாகவும், கல்வி சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று 16 - 07 - 90 காலை 9 மணிக்கு விக்னா கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெற உள்ளது. எனவே எமது நிறுவன மாணவர்களும் ஆசிரியர்களும் தவறாது சமுகம் அளிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்

விக்னா கல்வி நிறுவனம்

[சி-5265]


### ஸ்பிரிட் அருந்தி கணவன்-மனைவி மரணம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 14 போதைக்காக ஸ்பிரிட் அருந்திய கணவனும் மனைவியும் மரணமானார்கள்.

இச்சம்பவம் சாவகச்சேரி ஸ்டேஷன் வீதியில் இடம் பெற்றது.

இறந்தவர்கள் ஆ. ஆறுமுகம் (வயது 55) ஆ. தெய்வானை (வயது 50) என்று தெரிவிக்கப்பட்டது. [இ-117]

## சோதனையின் பின்னரே அகதிகள் அனுமதிப்பு

### கருணாநிதி நேற்றுத் தகவல்

சென்னை, ஜூலை 14 தமிழகத்திற்கு அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் நன்கு சோதனையிடப்பட்ட பின்னரே முகாம்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

-இவ்வாறு முதலமைச்சர் மு கருணாநிதி நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆயுதங்களுடன் வரும் போராளிகளுக்கு தமிழகத்தில் தங்க அனுமதி வழங்கப்படமாட்டாது

அகதிகள் பெருமளவில் தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருப்பதால், அவர்களைப் பராமரிக்க கூடுதல் நிதி உதவியை மத்திய அரசிடம் கோரவிருக்கின்றோம்.

அகதிகளை போராளிக் குழுவினர் இல்லாத தனி இடங்களில் தங்கவைக்கலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

ஏற்கனவே அல்லலுற்று வரும் அகதிகளிடம் பொறுப்பில்லாமல் நடந்துகொள்ளும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். -என்று முதலமைச்சர் சொன்னார். (அ-எ-9)

### நேற்று வந்த--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அன்ரன் அல்பிரட் பல நாட்களுக்கு முன் கேட்டிருந்தார்.

ஆனால் நேற்று 12 லொறிகளிலேயே உணவுப்பொருள்களும், மருந்துப்பொருள்களும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

5 லொறிகளில் 50 தொன் மாவும், ஒரு லொறியில் 10 தொன் அரிசியும், 3 லொறிகளில் 30 தொன் சீனியும், ஒரு லொறியில்பால் மாவகைகளும் ஒரு லொறியில் சுகாதாரத் திணைக்களத்துக்கான மருந்து வகைகளும், ஒரு லொறியில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மருந்து வகைகளும் வந்துசேர்த்தன.

இதைவிட சர்வோதய தலைமைப் பீடத்தில் இருந்து ஒரு லொறியில் கௌபி, அரிசி, சீனி, பால்மா உட்பட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும் வந்தன.

இந்த வாகன அணிக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு- ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று வந்துசேர்ந்த உணவுப் பொருள்கள் யாழ். மாவட்டத்துக்கு ஒரு நாளைக்கு மட்டுமே போதுமென்றும், தினமும் 50 லொறிகளில் கொண்டுவரப்பட்டால் தான் நிலைமையைச் சமாளிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-9)

## 72 பொதிகளில் கடிதங்கள் யாழ்ப்பாணத்தில் தேக்கம்

யாழ். மத்திய தபால் அலுவலகத்தில் கடந்த மாதம் 18 ஆம் திகதியில் இருந்து விநியோகம் செய்ப்படாமல் 72 தபால் பொதிகள் தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றுனுள் 40 பொதிகளில் உள்ள கடிதங்கள் குடாநாட்டுக்குள் விநியோகிக்க வேண்டியவை என்றும்-

ஏனையவை வெளிமாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டியவை என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பெரிய மதுரங்குளத்தில் தொடர்ந்து பெரும் மோதல்

கொழும்பு, ஜூலை 14 திருகோணமலை மாவட்டத்தில் பெரிய மதுரங்குளம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் இரண்டு சிப்பாய்கள் கொலைப்பட்டனர்.

அப்பகுதியில் தொடர்ந்து சண்டை நடந்து வருவதாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

### கொக்காவில் ---

இதேவேளை—

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து முகாமில் இருந்த எரிபொருள் குதம் தீப்பற்றிக்கொண்டது என்றும் –

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி படையினர் தந்திரமாகப் பின்வாங்கி, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட இரகசிய இடங்களை சென்றடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொக்காவில் தாக்குதலில் உயிர் தப்பிய சிப்பாய் ஒருவர் மாங்குளம் போய்ச் சேர்ந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

தாக்குதலில் தப்பிய பதினைந்து சிப்பாய்கள் அருகில் உள்ள காட்டில் மறைந்திருக்கின்றனர் என்றும் அந்தச் சிப்பாய் [...] செய்தி மேலும் தெரிவிக்கிறது.

### யாழ்.சின்னக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் சேதமுற்றன

மற்றைய குண்டு பாங்ஷால் வீதி - ஒட்டக்கரை வீதிப் பகுதியில் விழுந்து வெடித்ததில் அவ்விடத்தில் இருந்த பல வீடுகள் தரைமட்டமாகின.

சேமுற்ற வீடு ஒன்றில் இருந்த சிவரெத்தினம் வனிதா (19 வயது), சிவரெத்தினம் சோபனா (18 வயது) சிவரத்தினம் சாலினி (வயது5) ஆகியோர் காயமடைந்தனர்.

மூன்றாது குண்டு பீச் றோட்டுக்கு அருகில் டேவிட் வீதிப்பகுதியில் வீழ்ந்து வெடிக்காத நிலையில் காணப்பட்டது. [உ-3]


### முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனம் இன்று [14-07-90] தொடக்கம் தினசரி காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை திறந்திருக்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

கனம் வீடியோ சென்ரர். 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

[சி-5268]



### அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள்**

**மலேரியா தடுப்பு இயக்க பிரதேச காரியாலயம்**

**தற்காலிக இடமாற்றம்**

மேற்படி காரியாலயம் தற்காலிகமாக இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

ந. கனகசபை

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

(சி-5267)



### PATRICIAN INSTITUTES

எமது தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் சகல மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் 16 – 07 – 1990 திங்கட்கிழமைக்கு முன் அலுவலகத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பதிவாளர்,

**பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,**

59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி-5264)



### அறிவித்தல்

இல. 154, ஆஸ்பத்திரி வீதியில் சிற்றி ஏஜென்சி என்ற பெயரில் இயங்கிய எமது ஸ்தாபனத்தில் பில் கிளாக்காக பணிபுரிந்த காரைநகரைச் சேர்ந்த திரு. வே. கனகரத்தினத்திற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே எமது ஸ்தாபனத்துடன் தொடர்புடைய எவரும் இவருடன் எதுவித கொடுக்கல் வாங்கல்கள் செய்யவேண்டாம் என்று இத்தால் அறியத்தருகின்றோம். (13724)


## 31 ஆம் நாள் இதய அஞ்சலியும் 14 - 07 - 90 அந்தியேட்டிக் கிரியையும்



அன்னை மடியில்: 05 – 01 – 1953

ஆண்டவன் அடியில்: 14 – 06 – 1990

**செல்வி. புஸ்பறஞ்சனி பொன்னுத்துரை**

சிரிக்க வைத்த சித்திரமொன்று - ஏன்
சிலையாய் மாறிற்று? - கண்ணீர்
சிந்தியழ எம்மை விட்டு - ஏன்
சிறகடித்துப் பறந்தது?
புஸ்பரஞ்சனியாய் மிளிர்ந்த தீபம்
புன்சிரிப்போடணைந்தது.
பூத்து நிற்கும் மலர்களுக்கு - ஏன்
பதில் சொல்லாமல் சென்றது?
இறைவனது திருவடியில்
மாலையாகிவிட்ட பூமலரே!
குலவிளக்காய் எம்முடனே
குடியிருப்பாய் தினம் தினமே.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி.

(13728)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### ரோசம் வரட்டும்!

ரோமாபுரி பற்றி எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனின் கதை உலக வரலாறு படித்த எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதேபோல ஒரு நிகழ்வு இப்போதும் நடக்கிறது என்றால் அது எது என்று அறிய நீங்கள் ஆவலாக இருப்பீர்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம். அந்தத் தமிழர் தாயகத்தில் இரத்த ஆறு ஓடுகிறது. நிராயுதபாணிகளான தமிழ் மக்களை அரசின் ஏவலாளர்களான ஆயுதப்படையினரும், ஆளும் கட்சியின் கொலைப் படையினரும் சேர்ந்து கொன்று குவித்து வருகிறார்கள்.

கிழக்கில் இந்த இனப்படுகொலை திட்டமிட்டுச் செய்யப்படுகிறது என்பதை பிரெஞ்சு செய்தி நிறுவனம் அம்பலமாக்கியுள்ளது உலகுக்கு உண்மை நிலையை எடுத்தியம்பி உள்ளது.

இனப்படுகொலைக்கு அஞ்சி கிழக்குத் தமிழ் மக்கள் வடக்கை நோக்கி அகதிகளாக வந்துகொண்டிருக்கிறார்கள். வடக்கில் ஏதோ நிலைமை சீர் என்பதல்ல. இங்கும் ஷெல்லும், குண்டும் எப்போது வந்து உயிரைக் குடிக்கும் என்பது தெரியாத நிலை. வடக்கு மாவட்டங்களிலும் அகதி முகாம்கள் அதிகரித்துவிட்டன.

அது மட்டுமன்றி, 1983ஆம் ஆண்டைப் போல, ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்திலும் குவியத்தொடங்கி உள்ளனர். கடைசியாகக் கிடைத்த புள்ளி விவரங்களின்படி அகதிகள் எண்ணிக்கை இருபதாயிரத்தையும் தாண்டிவிட்டது திருச்சி, இராமேஸ்வரங்களிலுள்ள முகாம்கள் நிரம்பிவழிந்து சேலம் போன்ற பகுதிகளுக்கும் அகதிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறாகத் தமிழ் மக்கள் இறந்தொழிந்தும், அல்லற்பட்டும், அகதிகளாகியும் அவதியுறும்போது, கொழும்பில் உள்ள அரசு வடக்கு-கிழக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்துவதற்கு கொடுக்கை வரிந்துகட்டுகிறது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இம்மாதம் 25ஆம் திகதி தொடக்கம் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யலாம் என அறிவித்துள்ளது.

தமிழர்களின் உயிருக்கும், உணவுக்கும், பாதுகாப்பும், வசதியும் வழங்குவதைக் குறித்து எவ்வித அக்கறையும் காட்டாமல் வெளி உலகத்தை ஏமாற்றுவது போதாது என்று, தேர்தல் நடத்தியும் நல்லபிள்ளைப் பட்டம் வாங்க நினைக்கிறது அரசு.

இறந்து கொண்டிருக்கும் மக்கள் தேர்தலில் எப்படிப் பங்குகொள்ள முடியும். இது உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருப்பவன் தொண்டையில் ஏறி மிதித்து அவனது உயிரை விரைவாகப் போக்குவதைப் போன்ற கொடூரத்தனம் தேர்தல் என்பது அமைதியான, இயல்பான சூழ்நிலையில் சுதந்திரமாக, நிர்ப்பந்தம் இன்றி நடத்தப்படவேண்டியது.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 25 ஆம் திகதிக்கு முன்னர் இங்கு அமைதி வந்துவிடும் என்று அரசு நம்புகிறதா? அதற்கான திட்டம் எதுவும் உண்டா? அல்லது இன்னும் இரண்டு வாரங்களில் தமிழர்களை முற்றாக அழித்துவிடலாம் என்று நினைக்கிறதா அரசு?

தேர்தலைத் தமிழர்கள் பகிஷ்கரிப்பது என்பது வேறுவிடயம்.

இந்த நிலையில் தேர்தலைத் திணிப்பது என்பது தமிழர்களைச் சுயமரியாதை இல்லாதவர்களாகக் கருதும் கேலித்தனமாகும். அரசின் இந்தப் போக்கு தமிழருக்கு மேலும் ரோச உணர்ச்சியை உண்டாக்கட்டும்.

[அரசு தேர்தலை ஒத்திவைக்க யோசிக்கிறது என்ற செய்தி கிடைக்க முன்னரே இத்தலையங்கம் எழுதப்பட்டது]

# கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 20,000 அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டத்தில் 3,955 குடும்பங்களை சேர்ந்த 20 ஆயிரம் பேர் அகதிகளாக உள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபரால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 1,304 குடும்பங்கள் அகதி முகாம்களிலும் ஏனையவை அயல் கிராமங்களிலுள்ள உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

★ பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 689 குடும்பங்கள் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளன. இவர்களுக்கு ஒரு வாரத்துக்கான நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள 316 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் கையிருப்பு இன்மையால் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

★ கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 44 குடும்பங்கள் அகதி முகாம்களில் உள்ளன. இவர்களுக்கு 2 வார நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள 1000 குடும்பங்களுக்கு நிவாரணம் எதுவும் இன்னும் வழங்கப்படவில்லை.

★ பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 391 குடும்பங்கள் முகாம்களிலும் 237 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளன.

★ கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 180 குடும்பங்கள் முகாம்களிலும் 1450 குடும்பங்கள் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (இ-9)

# இந்தியாவிலிருந்து வந்த படகு கடற்படையினரிடம் சிக்கியது

வேலணை, ஜூலை 14

இந்தியாவில் இருந்து குத்து விளக்கு, மைசூர்பருப்பு ஆகியவற்றுடன் இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

பிரஸ்தாப படகு பருத்தித்துறையில் இருந்து கராம்பு மூடைகளுடன் இந்தியா சென்று அங்கிருந்து மேற்கண்ட பொருள்களுடன் திரும்பிக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்த ஐவரில் நால்வர் கடற்படையினரைக் கண்டதும் கடலில் குதித்து தப்பி விட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஒருவர் நயினாதீவில் வைத்து கிராம சேவையாளர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டார். (இ-167)

## மக்கள் கடை

யாழ்ப்பாணம், ஜூலை 14

வட்டுக்கோட்டை நவீன சந்தையில் இயங்கும் மக்கள் கடை மக்கள் பிரதிநிதிகளினால் நடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கிளிநொச்சி அரச அதிபர் வேண்டுகோள்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், செயலகத்திலும் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் கடமைக்கு வருமாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலைக்கு வரும் ஊழியர்கள் ஆணாகவிருந்தாலும், பெண்ணாகவிருந்தாலும் தங்க வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் இடம்பெயர்ந்த 14 ஆயிரம் குடும்பங்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் நிவாரணமாக 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

வடபிரதேசத்தில் உள்ள 28 தேவாலயங்களில் தங்கியுள்ளவர்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது. (ஒ-3)

# வவுனியா ஆஸ்பத்திரியை இயங்க வைக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

வவுனியா ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்க வைக்கும் முயற்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது.

வவுனியா ஆஸ்பத்திரியை இயங்க வைக்க யாழ். நகரிலிருந்து சென்ற மருத்துவக் குழு தற்போது யாழ். நகர் திரும்பி விட்டது.

தற்போது வவுனியா ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்க வைக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே சகஜநிலை திரும்பும் வரை நெடுங்கேணியிலேயே வவுனியா ஆஸ்பத்திரி தொடர்ந்து இயங்கும் (இ-9)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

நாயன்மார்கட்டு அருள்மிகு இராசேஸ்வரி பேச்சி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்,

தேர்த்திருவிழா 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கும், தீர்த்தத்திருவிழா 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.45 மணிக்கும் நடைபெறும். (இ-மு)

# கோடம்பாக்கம் கொலை; தி.மு.க.செயற்குழு கண்டனம்

கோடம்பாக்கத்தில் ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர்கள் 13 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இது போன்ற சகோதர யுத்தத்தில் ஈழத் தமிழ்ப் போராளிகள் ஈடுபடக்கூடாது என்றும், தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

# திருமலை நகரத்தில் நடந்தது என்ன?

கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் திருகோணமலையில் தமிழர் மீது வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, அதில் சிக்கித் தவித்த அரச ஊழியர் ஒருவர், அங்கிருந்து தப்பி கொழும்புக்குச் சென்று, இரு தினங்களுக்கு முன் கொழும்பிலிருந்து ஒருவாறு யாழ். வந்து சேர்ந்தார்.

அவரது அனுபவத்தை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

கடந்த ஜூன் 13 ஆம் திகதி திருகோணமலை உப்புவெளி பொலீஸ் நிலையம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டது.

இதையடுத்து இனக்கலவரம் வெடிக்கலாம் என்று அஞ்சி திருகோணமலை நகரில் இருந்த மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் – முக்கியமாக இளைஞர்கள் – நகரை விட்டு வெளியேறி, சாம்பல் தீவுக்கு அப்பால் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

அடுத்த நாள் திருகோணமலை நகரத்தில் இராணுவம், கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த சிப்பாய்கள் குவிந்தனர்.

### 50 பேர் கொலை

அன்று முதல அடுத்த மூன்று நாட்களுக்கு நகரில் அவர்கள் நடத்திய காட்டுத் தர்பாரில் தமிழர்களின் வீடுகள், உடைமைகள் சூறையாடப்பட்டன; தீ வைத்த எரிக்கப்பட்டன; சுமார் ஐம்பது பேர் வரை நகரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நகரத்தில் படையினர் அட்டகாசம் செய்யத் தொடங்கியதை அடுத்து பெரும் பகுதி மக்கள் பயத்தினால் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்

நான் சண்முக வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தேன்.

சென் ஜோசப் கல்லூரி, பெரிய மாதா கோவில், முத்துக்குமாரசாமி கோவில், ஆகிய இடங்கள் உட்பட பல இடங்களில் அகதிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

நகருக்குள் புகுந்த படையினர் காலை 7.30 மணி அளவில் முதலில் வீடு வீடாகச் சென்று தேடுதல் வேட்டை நடத்தினார்கள். வீடுகளில் இருந்த இளைஞர்களை அங்கங்கேயே வைத்துத் தாக்கினார்கள்.

பின்னர் சுமார் 15 வயது முதல் 55 வயது வரையுடைய ஆண்களை வீடுகளில் இருந்து வெளியே அழைத்துச் சென்றனர்.

சண்முக வித்தியாலயத்தில் புகுந்த படையினர் அங்கு என்னையும் வேறு சிலரையும் வெளியே கூட்டி வந்தனர்.

படையினர் வரும் தகவலைக் கேள்விப்பட்டு சண்முக வித்தியாலயத்தில் இருந்த இளைஞர்கள் சிலர் கல்லூரியின் மலசல கூடத்திலும், வேறு கட்டடங்களிலும் ஒளித்துக் கொண்டனர்.

படையினர் அங்கு பெரும் தேடுதல் எதையும் நடத்தாததால் ஒளித்த இளைஞர்கள் தப்பிக் கொண்டார்கள்,

### ஆண்களைக் கூட்டிச் சென்றனர்

இராஜவரோதயம்வீதி, பிரதானவீதி ஆகியவை வழியாக படையினர் எங்களை மடத்தடிக்குக் கூட்டிச் சென்றனர்.

போகும் வழியில் வீடுகளைத் தட்டித் தட்டி உள்ளே புகுந்து அங்கிருந்த ஆண்களை படையினர் வெளியே இழுத்து வந்தனர்.

இப்படி இழுத்து வரப்பட்ட சுமார் நூறுபேரையும் எங்களுடன் சேர்த்து மடத்தடிக்குக் கொண்டு சென்றனர்.

நாங்கள் மடத்தடிக்குச் சென்றபோது இவ்வாறு பிற வழிகளில் இழுத்து வரப்பட்ட சுமார் ஆயிரம் பேர் அங்கு ''ரவுண்ட- போர்ட்'' பகுதியில்- வீதியில் இருத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம்.

அவர்களை அங்கிருந்த இராணுவச் சிப்பாய்கள் சிலர் தாக்கிக் கொண்டிருந்ததையும் கண்டேன்.

நிலத்தில்குந்தியிருப்போரில் சிலரைக் கூப்பிட்டு, தமக்கு அருகே வரவழைத்து அவர்கள் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

### வயோதிபர் இடுப்பில் குறட்டு வெட்டு

வயோதிபர் ஒருவரின் இடுப்பை சிப்பாய் ஒருவர் குறட்டினால் அழுத்திப் பிடித்து. இழுத்தவாறுமிரட்டிக்கொண்டிருந்தார். ''நீதனே எல். ரி. ரீக்கு இடம் கொடுத்தது?'' என்று கேட்டு அவரைத் தாக்கினார்கள் அவரது இடுப்பில் குறடு பிடித்திருந்த இடத்தில் சேடையும் மீறி - இரத்தம் பிறிட்டோடுவதைக் கண்டேன்.

இப்படி நாலாபுறமும் அவர்கள் தாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து பயத்தில் உறைந்து போயிருந்தோம்.

சற்று நேரம் கழித்து அதிகாரி ஒருவரின் உத்தரவை அடுத்து நிலத்தில் இருத்தி வைக்கப்பட்டிருந்தவர்களை சுமார் 50, 100 பேர் கொண்ட குழுக்களாக பிரதான வீதி வழியாக படையினர் அனுப்பி வைத்தனர்.

### ஓடமுடியாதவருக்கு சிப்பாய்கள் அடி

இப்படி அனுப்பியவர்களை முற்றவெளி ஸ்ரேடியம் வரை ஓடிச் செல்லுமாறு வழியில் நின்றபடையினர் [illegible]. ஓடமுடியாமல் நடந்தவர்கள் வழியில் கடும் [illegible]களுக்கு இலக்கானார்கள்.

இப்படி ஓடியவர்கள் வழியில் விழுந்து எழும்பியதால், அவர்களின் செருப்புகளும் மற்றைய பொருள்களும் வீதியில் இறந்து கிடந்ததைக் கண்டேன்.

என்னுடன் ஓடி வந்த பலருக்கு இப்படி அடி விழுந்தது.

மாகாண அமைச்சின் செயலாளர்கள், உதவிச்செயலாளர்கள் போன்ற உயர் பதவிகளில் இருந்தவர்களும் என்னுடன் சேர்ந்து ஓடி வந்தனர். அவர்களுக்கும் அடி விழுந்ததைக் கண்டேன்.

### மதகுருமாரும் அடி வேண்டினர்

பூணூல் போட்ட ஐயர்மார் சிலரும், முழு வெள்ளை உடை தரித்த கத்தோலிக்க குருமாரும் அடி வேண்டியவாறு எம்முடன் ஓடி வந்தனர்.

எங்களை மடத்தடியில் இருந்து விரட்டிய போது அங்கிருந்த சுமார் பத்துப் பதினைந்து இளைஞர்களை படையினர் கடுமையாகத் தாக்கி தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

அவர்கள் அழைத்துச் செல்வதை என்னுடன் நின்ற சிலர் திரும்பிப் பார்த்தனர். இதனால் அவர்களும் கடும் தாக்குதலுக்கு இலக்கானார்கள் இதனை அடுத்து நாங்கள் தலையை நிமிராமல் நிலத்தைப் பார்த்தவாறு நின்றோம்.

### அரை குறையாய் எரிந்த சடலங்கள்

அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கேள்விப் பட்டேன். மடத்தடியிலும் கொத்தி ஒழுங்கையிலும் அரை குறையாக எரிந்த நிலையில் காணப்பட்ட சடலங்கள் இவர்களுடையதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் விரட்டலினால் மடத்தடியிலிருந்து ஸ்டேடியம் வரை சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் ஓடிச் சென்றோம்.

ஸ்டேடியத்துக்குள் சென்றபோது அங்கு இவ்வாறு பல வழிகளில் இழுத்துச் செல்லப்பட்ட பல ஆயிரக் கணக்கான தமிழர்கள் வெயிலில்- நடுமைதானத்தில்- இருத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

### குடிக்கத் தண்ணீரும் தரவில்லை

அன்று பகல் முழுக்க [illegible] இருத்தி வைக்கப்பட்டிருந்தோம். ஒரு பவுஸரில் தண்ணீர் கொண்டு வந்தனர். ஒவ்வொருவராகக் குடிக்க அனுமதிக்கப்பட்டோம். ஆனால் அந்தத் தண்ணீர் ஒருசில நூறுபேருக்குக் கூட போதுமானதாக இருக்கவில்லை.

நாம் மைதானத்தில் இருத்தி வைக்கப்பட்டிருந்த போதும் அங்கிருந்தவர்கள் அவ்வப்போது அழைக்கப்பட்டு எங்கள் கண் முன்னர் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

அன்று மாலை நான்கு மணிக்குப் பின்னர் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு எமது அடையாள அட்டைகள், பெயர், விவரம் ஆகியவை பற்றிய தகவல்களை பதிந்த பின்னர் அங்கிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

அரச ஊழியன் என்பதால் எம்மை நேரத்துடன் செல்ல அனுமதித்தார்கள். ஏனையோர் நீண்ட விசாரணையின் பின்னர்- அனேகமாக எல்லோரும்- அன்று இரவே விடுவிக்கப்பட்டனர்.

## ஜூன் 14ஆம் திகதிக்குப் பின்னரும் நகரில் இருந்து அவஸ்தைப் பட்டு வந்த அரச ஊழியர் தகவல்

இதன் பின்னர் மீண்டும் சண்முகவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தோம்.

### கடைகளைச் சூறையாடி பின் தீவைப்பு

அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் நகரில் இருந்த தமிழர்களின் பல வீடுகள் அடித்து நொருக்கப்பட்டன. அங்கிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

பிரபலமான பல கடைகளை சிப்பாய்கள் சூறையாடிய பின்னர் தீயிட்டுக் கொளுத்தினர்.

திருகோணமலை சிவன் கோவில் உட்பிரகாரம் கொடிஸ்தம்பம் என்பனவும் சேதமாக்கப்பட்டன.

இந்த வன்செயல்களில் அனேகமாக படைச் சிப்பாய்களே ஈடுபட்டனர்.

திருகோணமலையில் இம்முறை கலவரத்தின் போது சிங்களக் குண்டர்கள் வன்முறையில் இறங்க படையினர் அனுமதிக்கவில்லை. கோட்டைக்குள் சிங்கள அகதிகள் என்ற பெயரில் தங்கியிருந்த குண்டர்கள் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அப்பால் - நகரத்துக்குள் செல்ல - படையினர் அனுமதிக்கவில்லை.

படையினர் கொள்ளை, தீவைப்புச் சம்பவங்களிலேயே அதிகமாக ஈடுபட்டனர். கொலைச் சம்பவங்களில் அவர்கள் அதிகம் ஈடுபடவில்லை இதனாலும் சிங்களக் குண்டர்கள் நகருக்குள் வர அனுமதிக்கப் படாததாலும் திருகோணமலை நகரில் தமிழர்களின் உயிரிழப்பு பெருமளவு குறைந்தது.

கடைகள் பல நாசமாக்கப்பட்டதால் அகதி முகாம்களில் இருந்தோர் பட்டினியை எதிர் நோக்க வேண்டியதாயிற்று.

### கத்தோலிக்க குருமாரின் துணிவு

இதனைக் கண்டு சகிக்க முடியாத இரு கத்தோலிக்க குருமார்கள் தமது உயிரையும் பணயம் வைத்து, துணிந்து சிங்களவர் குவிக்கப்பட்டு இருக்கும் பிரடெறிக் கோட்டைக்குள் சென்று, அங்கிருந்த திருகோணமலை மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து உரையாடினர்.

திருமலை நகரில் உள்ள தமிழ் அகதிகளின் நிலையை கத்தோலிக்க குருமார் எடுத்துரைத்தனர். ஆனால் அரச அதிபர் நகரில் தமிழ் அகதிகள் இருக்கின்றனர் என்பதையே ஏற்க மறுத்துவிட்டாராம். கோட்டைக்குள் இருக்கும் சிங்கள அகதிகள் மட்டுமே இப்போது திருகோணமலையில் அகதிகள் அந்தஸ்துடன் இருக்கிறார்கள் என்று அவர் சொன்னாராம்.

நீண்ட நேரம் வாதிட்ட பின்னரே சமூக சேவைத் திணைக்களம் மூலமாக தமிழ் அகதிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களைவிநியோகிக்க அரச அதிபர் இணக்கம் தெரிவித்தாராம்.

அரச அதிபருடன் வாதிட்டு விட்டு, கோட்டைக்குள் இருந்து திருமலை செயலக கட்டடத்தை விட்டு, மதகுருமார் இருவரும்வெளியே வந்த போது அவர்களை அங்கு சிவில் உடையில் இருந்த சில சிப்பாய்கள் கடுமையாகத் தாக்கினர். இதனால் மத குருமார் ஒருவரின் உதடு பிய்ந்தது. காயங்களுடன் அவர்கள் நகருக்கு வந்து சேர்ந்தனர்.

### தஞ்சம் புகுந்தவரை சுட்டு எரித்தனர்

படையினர் 14 ஆம் திகதி நகருக்குள் புகுந்த போது நகரில் மனையாவெளிப்பகுதியில் இருந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுமாக சுமர் ஐம்பது பேர் வரை அருகில இருந்த திருகோணமலை ஆஸ்பத்திரிக்குள் தஞ்சம் புகுந்தனர்.

இவர்களைப் படையினர் கைது செய்து கொண்டு சென்றதாகவும்– பின்னர் இவர்களை சுட்டுக் கொன்று எரித்ததாகவும் தெரியவந்தது.

இப்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வளவு பிரச்சினைகளும் நகருக்குள் நடந்தவ. ஆனால் நகருக்கு வெளியே என்ன நடந்தது என்பதை யாராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

### அவர்களைப் பிடிக்க முடியவில்லை

விடுதலைப் புலிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து செயற்பட்டவர்கள் பிரச்சினை தொடங்க முன்னர் நகரை விட்டு வெயேறிவிட்டனர். அதனால் புலிகளையோ அல்லது அவர்களின் ஆதரவாளர்களையோ படையினர் அங்கு பிடிக்க முடியவில்லை.

நகருக்குள் பெரும் மோதல் சம்பவம் நடக்காததாலும், நகருக்கு வெளியே உள்ள இடங்களுக்கு இராணுவத்தினரை அனுப்ப வேண்டிய நிலை இருந்ததாலும், இரண்டு மூன்று தினங்களின் பின்னர் நகரின் பாதுகாப்புப் பொறுப்பு படிப்படியாக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலீஸார் பொறுப்பேற்றதை அடுத்து வன்செயல்கள் ஓரளவு குறைந்தன.

ஆங்காங்கே சந்திக்குச்சந்தி இரண்டு சிங்களப் பொலீஸாருக்கு ஒரு தமிழ்ப் பொலீஸார் என்ற ரீதியில் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

### இப்போதைய நிலைமை

தமிழர்கள் முகாம்களை விட்டு வெளியேறி தத்தமது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கிறார்கள். மக்கள் நடமாட்டமும் வழமைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது.

ஆனாலும் நகரில் தற்போது பெரும் பதற்றம் நிலவுகிறது. எனினும் வன்செயல் சம்பவங்கள் குறைந்து விட்டன.

மணிக்கூட்டுக் கோபுரம் வரை நடமாடும் சிங்களக் குண்டர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நகருக்குள் புகுந்து தமிழர்களையும் அவர்களது சொத்துக்களையும் அழிக்கலாம் என்று தமிழர்கள் அஞ்சுகிறார்கள்.

அதனால் அங்கிருக்கும் தமிழர்களில் பெரும்பான்மையானோர் எப்படியும் அங்கிருந்து தப்பி வடக்கே பாதுகாப்பான இடத்துக்கு வரவே முயற்சிக்கிறார்கள். ஆனால் நேரடியாக வருவதற்கு போக்குவரத்துப் பாதைகள் ஏதும் இல்லை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். (அ-உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மில்க்வைற் விலைகள்**

| | | |
|---|---|---|
| நீலசோப் | 110 கிறாம் | 3.50 |
| நீலசோப் | 55 கிறாம் | 1.50 |
| பார்சோப் | பெரிது | 20.00 |
| பார்சோப் | சிறியது | 10.00 |
| சலவைப் பவுடர் | 50 கிறாம் | 2.75 |
| | 140 கிறாம் | 8.00 |
| | 450 கிறாம் | 22.00 |

மில்க்வைற் - யாழ்ப்பாணம்


# உதயன்

14 - 7 - 1990 சனிக்கிழமை


நிமியா இயற்கை உரம்
விவசாயப் பெருமக்கள்
வசதிக்காகத்
திருநெல்வேலி சந்தி
அண்ணா கே ப்பி கடையில்
கிடைக்கிறது.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 14

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை ஏற்பதை அரசாங்சம் ஒத்திவைத்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## திருமலைக்கு இன்று பஸ்

கொழும்பு, ஜூலை 14

கொழும்பில் நிர்க்கதிக்குள்ளான திருகோணமலை வாசிகளை இன்று காலை பஸ்கள் மூலம் திருமலைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# ஈழ மக்களுக்கு உணவு அனுப்ப இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை

சென்னை, ஜூலை 14

சண்டை காரணமாக இன்னல் அடைந்திருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு உணவுப் பொருள்களையும் மருந்து வகைகளையும் விரைந்து அனுப்பும்படி இந்திய மத்திய அரசை சென்னையில் உள்ள இந்திய -இலங்கை நட்புறவுக் கழகம் கோரியுள்ளது

இந்த உதவிப் பொருள்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்மூலம் அனுப்பப்பட வேண்டும். அவை அங்குள்ள மக்கள் குழுக்கள் மூலம் விநியோகிக்கப்பட வேண்டும்.

-இப்படி கழகத் தலைவரும் ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசருமான வி. ஆர். கிருஷ்ணய்யர் கோரியுள்ளார். (உ-எ)

## படகை திருப்பி விட்ட படையினர்

நெடுந்தீவு, ஜூலை 14

நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் குறிக்காட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் படகு ஒன்று நடுக்கடலில் வைத்து கடற்படையினரால் மீண்டும் நெடுந்தீவுக்கு திருப்பி விடப்பட்டது.

இதற்கு முன்னர் சுகவீனம் அடைந்த குழந்தை ஒன்றுடன் நெடுந்தீவில் இருந்து வந்த மற்றும் ஒரு படகை கடற்படையினர் எச்சரித்து குறிக்காட்டுவான் செல்ல அனுமதித்தனர்.

வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

குறிக்காட்டுவான் - நெடுந்தீவு படகுச் சேவையின்போது கடற்படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன என்று கூறப்படுகின்றது. [இ-111]

# ஜீ.சி.ஈ உயர் வகுப்பு மாணவர் ஆலோசனைக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 14

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்கள் ஜீ. சி. ஈ உயர்தர வகுப்புக்களைக் கொண்ட சகல யாழ். மாவட்டப் பாடசாலைகளிலும் இன்று சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

ஜீ. சி ஈ உயர்வகுப்பு மாணவர்கள் தத்தமது பாடசாலைகளில் சமுகம் அளிக்குமாறு உயர் வகுப்பு மாணவர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

# இலங்கையர் உட்பட 200 பேர் இரேக்கக் கரையில் தஞ்சம்!

ஏதென்ஸ், ஜூலை 14

இலங்கையர் உட்பட சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் சுமார் 200 பேர் கிரேக்க நாட்டின் கரையோரப்பகுதி ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர் என்று கொழும்புக்குத் தகவல் கிடைத்துள்ளது:

'ஜமான்' என்ற கப்பலில் சட்டவிரோதமாகப் பயணம் செய்தவர்களே இந்த நிர்க்கதி நிலைக்காளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பலைக் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்ததும்' இச் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் தப்பி ஓட முயற்சித்தனராம்.

சுமார் 60 பேர் அச்சம் காரணமாக கப்பலில் இருந்து கடலில் குதித்தனர் என்றும் அவர்களைக் காப்பாற்றும் பணியில் கரையோரக் காவல் படையினர் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# மருந்து என்ற பெயரில் கசிப்பு விற்ற பெண்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஆயுள்வேத மருந்து என்ற பெயரில் கசிப்பு விற்பனை செய்த இரு பெண்களை விடுதலைப்புலிகள் நேற்று கைது செய்தனர்.

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி அருகே வைத்து இந்த இரு பெண்களும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து இரண்டு பரல்கள் நிறைய கசிப்பு கைப்பற்றப் பட்டது.

விசாரணையின் பின் அந்த இரு பெண்களும் எச்சரிக்கப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

### விமானம் "டைவ்" பண்ணுவதைக் கண்டு

# வீட்டை விட்டு வேகமாக ஓடினேன்! பீப்பாய் குண்டினால் வீடுதகர்ந்தது!!

## ஓடித் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வீட்டு வாசலில் நின்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது விமானங்களில் ஒன்று 'டைவ்' பண்ணி கீழே எனது வீட்டை நோக்கி வருவது போலத் தோன்றியது.

அதனால் வீட்டிலிருந்து வீதி வழியாக வேகமாக ஓடினேன். ஓடிக்கொண்டிருந்த போது திரும்பிப் பார்த்தேன். விமானத்திலிருந்து போடப்பட்ட ஒரு கறுத்தப் பொருள் கீழ் நோக்கி வந்து கொண்டிருந்தது. அதனால் மேலும் வேகமாக ஓடினேன்;

வீட்டிலிருந்து சுமார் 75 மீற்றர் ஓடியபோது எனது வீட்டுப் பக்கம் பெருத்த சத்தத்துடன் குண்டு ஒன்று விழுந்து வெடித்தது.

— இப்படித் தெரிவித்தார் யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு. மரியதாஸ் (வயது 57).

நேற்று யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் அவரது வீடும் அருகில் இருந்த சில வீடுகளும் முற்றாகத் தரைமட்டமாகின.

தமது அனுபவம் குறித்து திரு. மரியதாஸ் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி சின்னக்கடை வீட்டிலிருந்து ஏற்கனவே வேறு இடத்துக்கு இடம் பெயர்ந்திருந்தோம்.

நேற்று சம்பவம் நடந்த போது நானும் இரண்டு மகன் மாரும் வீட்டுக்கு வந்திருந்தோம்.

விமானம் வீட்டை நோக்கித் தாழ்ந்து வருவதைக் கண்டதும் நான் வேகமாக ஓடித் தப்பினேன். வீட்டு வாசலில் — நான் முதலில் நின்ற இடத்துக்கு — சுமார் இருபது இருபத்தைந்து அடி தூரத்தில் குண்டு விழுந்து வெடித்திருக்கிறது.

அந்த இடத்திலிருந்து வேகமாக ஓடியதால் நான் தப்பினேன்.

### அதிர்ச்சியால் விழுந்தார்

குண்டு வெடித்த சமயம் எனக்கு அருகில் ஓடிக்கொண்டிருந்த ஒருவர் அதிர்ச்சியால் கீழே விழுந்ததைக் கண்டேன்.

விமானம் கீழ் நோக்கி வருவதைக் கண்டதும் வீட்டில் இருந்த எனது மகன் ஒருவரும் மற்றப் பக்கமாக ஓடினார். குண்டு கீழே வருவதைக் கண்டு அவர் நிலத்தில் படுத்துக் கொண்டார். அதனால் அவரும் காயமின்றித் தப்பினார்.

வீட்டு வாசலில் நின்ற மற்றைய மகன் பீப்பாய்க்குண்டு விமானத்திலிருந்து போடப்பட்டதைக் கண்டதும் வீட்டு வாசலுக்கு அருகில் - மதகு ஒன்றினுள் அமைச்கப்பட்டிருந்த - பதுங்கு குழிக்குள் குதித்தார். அதனால் அவரும் ஆபத்து ஏதுமின்றித் தப்பினார்.

எங்கள் வீடு முற்றாகச் சேதமுற்றது.

-இவ்வாறு அவர் கூறினார்.

# மாகாணசபை அதிகாரிகள் யாழ். வரக் காத்திருக்கிறார்கள்

யாழ்ப்பாணம், ஜூலை14

திருகோணமலை மாகாண சபை அலுவலகங்கள் மூடப்பட்டன. அதில் கடமையாற்றிய அதிகாரிகளும், ஊழியர்களும் யாழ்ப்பாணம் வரக் காத்திருக்கிறார்கள்.

திருகோணமலையில் கடந்த மாதம் பதின்மூன்றாம் திகதி ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து மாகாண அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன. நிலைமை ஓரளவு சீரடைந்ததும் அலுவலகங்கள் திறக்கப்பட்டு ஊழியர்களுக்கு ஜூன் மாதச் சம்பள முற்பணம் வழங்கப்பட்டது. அத்துடன் மாகாண சபை அலுவலகங்கள் மூடப்பட்டன.

மாகாண சபையில் கடமையாற்றிய அதிகாரிகளும், ஊழியர்களும் அரச விடுதிகளில் தங்கியுள்ளதாகவும், யாழ்ப்பாணம் வருவதற்காக அவர்கள் காத்திருப்பதாகவும் அங்கிருந்து [illegible] உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## மினிபஸ் சங்க கூட்டம்

வடபிராந்திய மினிபஸ் உரிமையாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய மினிபஸ் சங்க பஞ்சாயத்து தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் முத்திரைச்சந்தி பஸ் நிலையத்தில் கூடுமாறு சங்கத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா கேட்டுள்ளார். (ஒ-3)

# கிரனேட் தாக்குதலுக்கு நயினாதீவு வாசி பலி!

## படையினர் வஞ்சம் தீர்த்தனர்!!

வேலணை, ஜூலை 14

கடற்படையினரின் கோரிக்கைக்கு இணங்காததை அடுத்து நயினாதீவு வாசி ஒருவர் கிரனேட் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானர்.

படையினரின் கிரேனட் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானவர் நாகலிங்கம் துரைராஜா (வயது 40) எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நயினாதீவு கடற்படை முகாமுக்குச் சமீபமாக திரு. துரைராஜாவின் வீடு அமைந்திருந்தது. வீடு தங்களுக்குத் தேவைப்படுவதாகவும் அதனைத் தருமாறும் படையினர் கேட்டிருந்தனர்.

திரு. துரைராஜா வீட்டை ஒப்படைப்பதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்றும் அதை அடுத்தே படையினர் வஞ்சம் தீர்க்கும் வகையில் இந்த செயலில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிரனேட் தாக்குதலின் போது மரணமான துரைராஜா வீட்டில் நித்திரையாக இருந்தார் என்று சொல்லப்பட்டது. (ஒ-167)

### தமிழர் கொலை பற்றித் தெரிவிக்க

# தமிழ்க் கட்சிகள் இணைந்து ஜனாதிபதியை சந்திக்கும்

கொழும்பு, ஜூலை 14

வடக்கு-கிழக்கு நிலைமை தொடர்பாக சகல தமிழ்க்கட்சிகளும் ஒன்றாக ஜனாதிபதியைச் சந்தித்து பேசவிருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறுவதேஇச் சந்திப்பின் நோக்கம் என்று சொல்லப்பட்டது.

இதற்கான முயற்சியில் ஈ.பி ஆர்.எல்.எவ் இயக்கம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# கூட்டணிப் பிரதிநிதிகள் ரஞ்சனுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 14

தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக் குழு ஒன்று திரு. மாவை சேனாதிராஜா எம்.பி. தலைமையில் கடந்த வியாழன் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவைச் சந்தித்துப் பேசியது.

வடக்கு - கிழக்கு மாகாண நிலைமை, தமிழ் மக்கள் படும் இன்னல்கள் ஆகியன குறித்து சந்திப்பின்போது பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஈழ மோதல்கள் குறித்து

# பிரிட்டன் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளது

லண்டன், ஜூலை 14

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சண்டை ஏற்பட்டிருப்பது குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருக்கியது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அமைப்பு இராஜாங்க அமைச்சர் சாம் பெரி முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்,

கடந்த 2 ஆம் திகதி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இலங்கை நிலைமை பற்றி எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் பெரி பதிலளிக்கையில் —

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் இலங்கை அரசுடன் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்டு நிலைவரங்களை அறிவித்து வருவதாகவும்கூறினார். [உ-எ]

# 5,000 பேர் சத்தியாக்கிரகம் படையினரின் வெற்றிக்காக

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் போராடும் ஆயுதப் படையினர் வெற்றியடைய வேண்டி கடந்த வியாழக்கிழமை மாலை அனுராதபுரம் ருவான்வெலிசயா முன்றலில் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது.

ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாஸா, மத்திய மாகாண மகளிர் விவகார அமைச்சர் ராணி அதிகாரி உட்பட 5 ஆயிரத்திற்கு அதிகமானோர் அச்சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். [ஒ-எ]

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் சந்திரதாசன் சத்தியசொரூபன்

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்வன் சத்தியசொரூபன் 12-07-90 அன்று காலமாகி விட்டார். இவர் சந்திரதாசன் (வேலைகள் மேற்பார்வையாளர் நீர்ப்பாசன திணைக்களம், முருங்கன் பிரிவு) கனகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும், குமுதினி, நஜீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற (மாதகலைச் சேர்ந்த) சம்பந்தமூர்த்தி-இராஜலட்சுமி தம்பதிகளினதும், கந்தையா காலஞ்சென்ற நல்லபிள்ளை தம்பதிகளினதும் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13-07-90 வெள்ளிக்கிழமையன்று நடை பெற்றது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்: ச. சந்திரதாசன்

சங்கரத்தை. [13726]

## திரு. V. K. வீரவாகு

இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா ஓவசியரும் கலட்டிப்பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவுமாகிய திரு. V. K. வீரவாகு அவர்கள் 10-07-90இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசியின் தகப்பனாரும், பானுமதியின் சிறிய தகப்பனாரும், மு. கணேசலிங்கம் (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா பொறியியலாளர்), ச. இராஜலிங்கம் (இளைப்பாறிய முகாமையாளர் பெற்றோலியம் கூட்டுத்தாபனம்), ஆகியோரின் மாமனாரும், விக்னேஸ்வரலிங்கம்-சாந்தினி (லண்டன்), ஜெயந்தி-பாலசுந்தரம் (கனடா), ஜெயறதி - சுகுமார் (லண்டன்), இரவீந்திரலிங்கம் - சிவசக்தி (லண்டன்), சந்திரவதனா-வாசன் (அவுஸ்திரேலியா), ஈஸ்வரலிங்கம் (லண்டன்), சத்தியலிங்கம் (லண்டன்), ஜெயநளினி, ஜெயவதனா, லிங்கவதனா ஆகியோரின் பேரனும் சஞ்சுதா, சஞ்சீவன், நிறோஜன், ஜயந்தன், பிரதீப், அனுஜா ஆகியோரின் பூட்டனும் V. K. சுப்பிரமணியம் (இளைப்பாறிய S. R.D) V. K. தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய O. A. நில அளவைத் திணைக்களம்) திருமதி சங்கரப்பிள்ளை கதிராசிப்பிள்ளை, திருமதி மாப்பாணபிள்ளை, வேதநாயகி காலஞ்சென்ற V. K. கதிரவேலு விதானையார், V. K. முருகேசு (Banker and Planter), V. K. ஆறுமுகம் (S. P.) திருமதி முருகேசு பார்வதிப்பிள்ளை ஆகியோரது அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் குடும்ப மயானத்தில் 11-07-90இல் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மு. கணேசலிங்கம்

ஜெயந்தி வாசா,
இமையாணன்,
உடுப்பிட்டி. [13733]

## செல்லர் நாகலிங்கம் துரைராஜா
### நயினாதீவு

செல்லர் நாகலிங்கம் துரைராஜா நயினாதீவில் அகாலமரணமானார்.

இவர் நாகலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராஜநாயகியின் (காகித கூட்டுத்தாபனம், கொழும்பு) அன்புக் கணவரும், நுஜிதா, துசானந், இராஜ் ஆனந் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி (ஆசிரியை), பாலசுந்தரம் (எக்கவுண்டன்), செல்வநாயகி, குலேந்திரன் (லண்டன்), அருளானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைசாமி தம்பதிகளின் (கனடா) அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-07-1990 வெள்ளிக்கிழமை மாலை நயினாதீவில் நடைபெற்றது. உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

நயினாதீவு. 5 A. தகவல்:

[13661] திருமதி அன்னலட்சுமி மருதப்பு

# மரண அறிவித்தல்

## இராமசாமி சண்முகநாதன்

இல. 45, நல்லூர் குறுக்குத் தெரு, இராமசாமி சண்முகநாதன் [முன்னை நாள் யாழ். மாநகர சபை மின்கம்பி இடுபவர்] 13-07-1990 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-7-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள் ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகிறார்கள். இவ் அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்;
சு. பாலகிருஷ்ணன்.
(மகன்)

(13739)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org